# நல்லுறவே நம் உயர்வு

## நம்முடைய முதல் எதிரி யார்?

'எனக்கு இவன் வேண்டாதவன்; அவன்தான் என் ஜென்ம விரோதி', 'இன்றைக்கு இவ்வளவு பாதிக்கப்பட்ட நிலையில் நான் இருக்கக் காரணமே அந்த ஆள்தான்.'

'எனக்குப் பிள்ளைங்க சரியில்லை' 'எங்க வீட்டுக்காரரா! கேட்கவே வேண்டாம்', 'இதெல்லாம் ஜுஜுபி! இவரை விட்டுட்டு வெளியே வந்தேன்னா இதை விடச் சம்பாதிப்பேன்' என்றெல்லாம் சறுக்கல்களுக்கும், தாங்கள் முடங்கிப் போனதற்கும், காரணம் கற்பிப்பதிலும், ஆள்காட்டி விரலைத் திசைதோறும் காட்டுவதிலும் மனிதர்கள் மகா சமர்த்தர்கள்.

"அப்படி இல்லை, உன்னுடைய இந்த நிலைக்குக் காரணம் அவர்களல்ல. நீதான்! குறை உன்னிடத்திலேதான் இருக்கிறது" என்று துணிந்து சொல்கிற நபர்கள் இவர்களுக்கு விரோதி களாகிப் போவதுதான் இன்னமும் பெரிய துரதிர்ஷ்டம்.

கற்பனையான எதிரிகளை உருவாக்கிக் கொள்வதிலும் வேறு சில எதிரிகளைக் கண்டுபிடிப்பதிலும் அவர்களைப் பற்றிய நினைப்பில் ஆழ்ந்து போவதிலும் இவர்களோடு போராடுவதிலுமே வாழ்வின் பெரும் பகுதியை வீணடித்துக் கொண்டிருக்கிற மனிதர்களுக்கு ஒருசில வார்த்தைகள்.

நம்முடைய தலையாய எதிரி முதல் எதிரி யார் தெரியுமா? நாம்தான்!

'என்னைவிட எனக்கு வாய்த்த நலவிரும்பி யார் இருக்க முடியும்? நானா எனக்கே கெடுதல் செய்துகொள்கிறேன்' என்கிறீர்களா?

ஆமாம்.

ஒரே ஒரு தாளை மட்டும் எடுங்கள். மேசையில் அதை மட்டும் வைத்து எழுதுங்கள்.

பிறகு கற்றைத் தாள்களை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் மேல் தாளில் எழுதுங்கள். மூன்றாவதாக ஒரே ஒரு தாளை மட்டும் எடுத்து பொத்தலிட்ட அட்டையின்மீது (Perforated) வைத்து எழுதிப் பாருங்கள். மூன்றும் உங்களது கையெழுத்து தான். மூன்றும் ஒரே பேனாதான், மூன்றும் ஒரே விதமான தாள்கள்தாம். ஆனால் மூன்று கையெழுத்தும் ஒரே மாதிரி இராது. முதலாவது சுமாராகவும் பின்னது அழகாகவும் மூன்றா வது சிலரது தலையெழுத்தைவிட மோசமாகவும் இருக்கும்.

கீழே எதை வைத்து எழுதுகிறோம் என்பதைப் பொறுத்து நம் கையெழுத்து மாறுகிறது என்பதுபோல், அடித்தளமாகிய நம் குடும்ப வாழ்க்கைதான் நம் வாழ்வின் போக்கையே மாற்றியமைக்கிறது. நம்மைச் சுற்றி உள்ளவர்களோடு நாம் வைத்துக் கொள்ளும் சமூகஉறவுதான், நம் வெற்றி தோல்வி களுக்கு அடிப்படைகளாக அமைகின்றன.

உங்கள் இல்லத்துக் கல்லூரிப் பையன் புதிதாக வந்துள்ள பல்சர் மோட்டார் சைக்கிள் கேட்கிறான்.

பாதுகாப்புக் கருதி சம்மதிக்கத் தயங்குகிறீர்கள். இளமைத் துள்ளல், அசாத்திய வேகம், மோசமான சாலை விபத்துகள் எல்லாம் கண்முன் ஓடி மறைய மறுக்கத் துணிகிறீர்கள் உடனே ஒரு மனப் போராட்டம்.

அவனுக்கோ உடனே பதில் தெரிந்தாக வேண்டும்.

சம்மதித்தால் விபரீதம்; மறுத்தால் விரோதம். எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?

ஒரு நல்ல வழி இருக்கிறது.

## திறக்காத வாய்கள் திறக்கின்ற பரிசுகள்

'அதிவேக மோட்டார் சைக்கிள் கேட்ட மகனுக்கு தந்தை எப்படி அழகுற மறுப்புச் சொல்வது? தந்தைக்கு நல்ல மூடு இருந்தால் "வா! என்னோடு கொஞ்சம் பேச வேண்டும்" என்று ஆரம்பித்தாலே போதும். மகனுக்குப் புரிந்துவிடும், அப்பா நம்மைக் காற்று இறக்கத்தான் அழைக்கிறார் என்று!

தந்தைக்கு நல்ல மூடு இல்லை என்று வைத்துக் கொள்வோம். (கோபமாக, சற்றே காட்டமாக, அல்லது சலிப்புத் தோனியுடன் பேசுவது போன்ற எதையும்) நல்ல மூடு என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்!

சிரித்து, கலகலப்பாக தோழமை உணர்வுடன் அருகில் அமர்ந்து பேசி மகனின் தோளை அணைத்தபடி, கைகளைக் கோர்த்தபடி ஒரு தந்தையால் பேச முடிந்தால் அதுதான் நல்ல மன நிலையின் அடையாளங்கள் என்பேன். 'பணம் பெரிசில்லை ராஜா! உன் பாதுகாப்புக்குத்தான் யோசிக்கிறேன். ஒன்று செய்வோம் 84,000-த்தை உன் பேரில் வங்கியில் போட்டு விடுகிறேன். அப்புறமா வாங்குவது பற்றி யோசிப்போம் கண்ணா'' என்று தேன் கலந்து சொன்னால் பையன் 'தொபுக்கடீர்'தான்!

தந்தை - மகன் இடையே இன்று ஸ்பரிசங்களே கிட்டத்தட்ட இல்லை. வயது ஓட ஓட வாலிபனாக மகன் ஆக ஆக அவனை ஓர் அந்நியன் போலத்தான் நடத்துகிறார்கள் தந்தைமார்கள்.

ஸ்பரிசம் என்பது இரத்த உறவில் மிக முக்கியமானது. வீட்டுக்கு விருந்தினர் வரும்போது, என் தலையாய சொத்து இவன், என்று தோளோடு அணைத்தபடி ஒரு தந்தை அறிமுகப்படுத்தட்டும், அப்புறம் பாருங்கள் அந்த மகன் என்ன ஆகிறான் என்று.

மகன்களுக்கு இன்று தந்தைகளின் பரிசுகள் வேண்டா வெறுப்பாகத் திறக்கின்றனவேயன்றி, வாய்கள் திறப்பது இல்லை. தந்தைக்கும் மகனுக்கும் இடையே புரிதல்

(understanding) இல்லை என்பது மட்டுமல்ல, பகிர்தல் (Sharing) இல்லை.

இதனால் மகன் என்ன சொல்கிறான் தெரியுமா? "உங்க வீட்டுக்காரர்கிட்ட (?) சொல்லி வை. இந்த வேலையெல்லாம் என்கிட்ட வேணாம்னு அப்புறம் மரியாதை கெட்டுப் போயிடும்" (இப்ப என்னவோ ரொம்பக் கொடுக்கிற மாதிரி) என்கிறான்.

காலந்தோறும் தந்தையைப் பற்றிய அபிப்பிராயங்கள் மகனுக்கு மாறிக்கொண்டே இருக்கின்றன. மிக இளவயதில் மகன் : "எங்கப்பா ஊம்! எங்கப்பா!" என உரிமை கொண்டாடுகிறான்.

சிறுவனாக ஆகும்போது! "எங்கப்பா எவ்ளோ பெரிய ஆளு தெரியுமா?"

வாலிபனாகும்போது "அந்தாளு இருக்காரே அவர் ஒரு வேஸ்ட் பார்ட்டி."

திருமணமானதும், "அவர் கிடக்காரு. அவரைப் போய்க் கேட்டுக்கிட்டு."

சற்று நடுத்தர வயதில் "அவரைக் கேட்காம நான் எதுவுமே செய்யுறதில்லை தெரியுமா?"

அப்பா போய்ச் சேர்ந்ததும் "தெய்வம் சார் அவரு! எங்களை அவரு ஆளாக்கின விதம் இருக்கே..." என்று விழியோரம் ஈரம் காட்டுகிறான்.

இப்படிக் காலந்தோறும் தந்தையைப் பற்றிய கருத்துகள் மாற என்ன காரணம் தெரியுமா?

## தனித் தன்மைகளை முடக்கிப் போடுவதா?

காலந்தோறும் தந்தையின்மீது உள்ள மரியாதையும் அன்பும் மகனுக்கு மாறுபடக் காரணம்...

தந்தையிடம் உள்ள கோளாறுதான் அல்லது தந்தை ஆரம்பித்து வைத்த கோளாறுதான் என்று சற்றே திருத்தியும் சொல்லலாம். ஆமாம், ஒரு தொழிலை ஆரம்பித்தால் அது வளர வேண்டும் என நினைக்கிறோம்; கிளைகள் ஆரம்பிக்கிற அளவிற்கு அது ஆலமரமாகப் பரவவேண்டும் என்று விரும்புகிறோம். ஒரு செடியை நட்டால் அது மரமாக வளரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஒரு கட்டட வேலையைத் துவங்கினால் அது நிற்கக்கூடாது, தேங்கிவிடக் கூடாது வளர வேண்டும் என்று அதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறோம்.

ஆனால், குடும்ப உறவுகளில் அன்பையும் புரிந்துணர்வை யும் நாள்தோறும் வளர்க்க வேண்டும் என்று செயல்படு கிறோமா என்றால், நிச்சயமாக இல்லை.

ஆனால், அப்படி ஒன்றும் இல்லை யார் சொன்னார்கள் அப்படி? என்று வெளியில் ஒப்புக்குச் சொல்லிக் கொள்கிறோம். மகன் குழந்தையாக இருந்தபோது கொஞ்சினோம். உப்புமூட்டை சுமந்தோம். அவனைவிட வேகமாக ஓட முடியாததுபோல் நடித்து மெதுவாக ஓடி அவன் பிடியில் சிக்கினோம்.

ஆனால் இன்று? முடிந்தால் அடிக்கிறோம். முடியாவிடில் அடிக்கக் கையை ஓங்குகிறோம். சொற்களால் காயப்படுத்து கிறோம். அவனைச் சுமந்த உடம்பில் உள் இதய அறையில், மகனைப் பற்றிய எதிர்மறையான உணர்வுகளையும் கோபத்தையும் சுமக்கிறோம். வளர்ந்து விட்டான். இனியும் என்ன ஸ்பரிசம் என்று அவனை எட்டி நின்று தொடாமல் பேசுகிறோம். தொழில், வேலை என்று சொல்லி மகனுக்கு எட்டாதவர்களாக ஆகிப் போகிறோம். சமயங்களில் அவனுக்கு நாம் கைபேசியில் கூடக் கிடைக்காதபடி பார்த்துக் கொள்கிறோம்.

இவற்றோடு விட்டோமா? அதைக் கேட்கவும் இதைக் கேட்கவும் என்னிடம் தானே வந்து நிற்கவேண்டும். அப்போது பார்த்துக் கொள்கிறேன் என்று ஊழியர் - உரிமையாளர் உறவில் நடக்குமே ஓர் இழுபறி, அத்தகைய நிலைமையை மகனிடமே உருவாக்குகிறோம். அன்பு மறுக்கப்பட்டு, உடல் ஸ்பரிசங்கள் (அரவணைப்புகள்) மறுக்கப்பட்டு, கேட்பனவெல்லாம் மறுக்கப் பட்டு, எல்லாவகையிலும் அவன் உதாசீனப்படுத்தப்பட்டால் அவனது எண்ண அலைகள் எதிர்ப்பலைகளாக மாறுமா, மாறாவா? நாம் எந்த வழியில் சிந்திக்கிறோமோ, அதே வழியில் மகனும் சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் அவன் என்ன தந்தையின் ஜெராக்ஸா? தந்தை வழியிலிருந்து வேறுபட்டுச் சிந்தித்த காரணத்தினால்தானே இன்று எத்தனையோ குடும்பத் தொழில்கள் அபாரமாய் வளர்ந்திருக் கின்றன. பெரியவர் வழியிலேயே சிந்தித்திருந்தால் அனில் அம்பானியும் முகேஷ்அம்பானியும் உலகப் பணக்காரர்களாக ஆகியிருக்க முடியுமா?

தனித்தன்மைகளை முடக்கிப் போடுவதற்கு நாம் சூட்டி யிருக்கிற புதுப்பட்டம்தானே 'சொல்பேச்சுக் கேட்காதவன்' என்பது?

## தந்தைத் தன்மைக்கு சிங்கம்தான் உதாரணம்

"லெஃப்ட்ல போ. ரைட்ல திரும்பு!" என்று மகனுக்கு கார் ஓட்டக் கற்றுக்கொடுக்கிறபோது சொல்லிக் கொடுத்த தந்தையைப் போலவும், தொடர்ந்து நம் இராணுவ கமாண்டுகளையும் வாழ்நாளெல்லாம் நம் வாரிசுகள் பின்பற்ற வேண்டும் என்கிற மிகப் பெரிய எதிர்பார்ப்பு இருக்கிறதே. இதைக் குறைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

வளர்ந்த வயதிலும் ஒரு மகன் இந்த வழிகாட்டலை எதிர்பார்த்தால் இதற்காக தந்தை வேண்டுமானால் மகிழலாமே தவிர, இன்னும் வாகனம் ஓட்டுகிற பாதையை மட்டுமல்ல. வாழ்க்கைப் பாதையைத் தேர்ந்தெடுக்கும் பக்குவத்திற்கே அவன் வளரவில்லை என்றுதான் பொருள்.

இப்படிக் காலமெல்லாம் அவர்கள் அடைகாக்கப்பட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு பெற்றவர்களுக்கு வேண்டு மானால் இருக்கலாம். ஆனால் வாரிசுகளுக்கு இந்த எதிர்பார்ப்பு இல்லை.

மீன், குஞ்சு பொரித்தால் அதன்பிறகு அவற்றைத் திரும்பிக் கூடப் பார்ப்பது இல்லை. 'எப்படியோ போங்க' என்று விட்டுவிடுகிறது. யானையோ தன் குட்டிகளைக் காலமெல்லாம் கண் பார்வையிலேயே இருக்கும்படி பார்த்துக் கொள்கிறது. சிங்கங்கள் அப்படி அல்ல. ஒரு குறிப்பிட்ட பருவம் வரை பராமரித்து, 'உனக்கென்று தனி எல்லை வகுத்துக் கொள்; ஓடிப் போய் விடு என்னிடமிருந்து' என்று உரிமை தருகிறது. தந்தைத் தன்மைக்கு சிங்கம்தான் சிறந்த உதாரணம்.

இயலாமைகளைப் புரிய வைக்க முயற்சி செய்யாமல், முடியாது; என்னிடம் நடக்காது என்று அதிகாரப் போக்கைக் கடைப்பிடிக்கும் தந்தைகளுக்கு மகன்கள் பிடிபடாத பிள்ளைகளாகவே ஆகிப் போகிறார்கள்.

நற்செயல்களுக்கும், நன்முயற்சிகளுக்கும், பிள்ளைகளைப் பாராட்டும் வழக்கமே நம்மிடம் அநேகமாய் இல்லை. அதெப்படித் தட்டிக் கொடுக்கச் சொல்கிறீர்கள்? ரொம்பவும் செயற்கையாக இருக்குமே! என்கிறார்கள் தந்தைமார்கள்.

அமெரிக்காவிலிருந்து வந்திருந்த ஒரு தமிழ்க் குடும்பத்தைச் சந்திக்கப் போயிருந்தேன். இரண்டு வயதுப் பையன், "Good job" என்றான். எதற்கு இப்படிச் சொல்கிறான் என்று கேட்டேன்.

அவன் ஒரு நல்ல காரியத்தை இப்போது செய்தான். இதை நாம் கண்டுகொள்ளவில்லையாம். அதை "Good job" என்று நான் சொல்ல வில்லை என்று சுட்டிக்காட்டுகிறான். இரண்டு வயதுக் குழந்தைக்கே இந்த எதிர்பார்ப்பு என்றால் இருபது வயது வாலிபனுக்கு எவ்வளவு எதிர்பார்ப்பு இருக்கும்?

ೞೞೞ

## பணத்தைப் பற்றிய பார்வைகள் மாறட்டும்!

மகனின் நல்ல தன்மைகளைப் பாராட்டாமல், அவனது சிறு சிறு செயல்களில்கூட ஒளிந்து கிடக்கும் திறமைகளைத் தட்டிக் கொடுக்காமல், அவனது செயல்களில் குறை காண்பதையே வழக்கமாக்கிக் கொள்கிற அப்பாக்களே இன்று அதிகம்.

"அவன் நல்லா வரணுமேன்னு அப்படிச் சொன்னேன். அதைத் தப்பாவே எடுத்துக்கிட்டா நான் என்ன பண்றது?" என்கிற எடுபடாத வாதத்தை விட்டுவிடுவது நல்லது.

மாறாக, அவன் சிறு குழந்தையாக இருந்தபோது "அதுக்கு ஒரு ஒரு பதில் குடுத்தான் பாரு! அசந்துட்டேன்", "பட்டுன்னு அடிச்சான் பாரு ஆடிப் போயிட்டேன்!" என்று சிறு சிறு கெட்டிக்காரத்தனத்தைக் கூடச் சொல்லி மகன் புராணம் பாடி, கேட்பவர்களையெல்லாம், 'அடப் போதும்யா உன் மகன் புராணம்'னு நினைக்க வைத்தோமே, அந்த இயல்பை ஏன் இப்போது அவன் வளர்ந்த பிறகு அடியோடு விட்டுவிட்டோம்.

கன்றாக இருந்தபோது உரமூற்றி விட்டு, செடியாக வளர்ந்த பிறகு இப்படி வேரில் அமிலம் ஊற்றுகிறோமே, இது ஏன்?

குற்றம் காண்பதன் முலம் ஒரு மகனின் வளர்ச்சியில் நல்லபடியான பங்களிப்பை அளிக்கவே முடியாது. அதற்காகத் தவறுகளைக் கண்டுகொள்ளாமல் இருக்கச் சொல்லவில்லை.

மகனைப் பாராட்டுவதற்குக் களம் இருந்தும் அவனைப் பாராட்டாதிருந்துவிட்டு, குற்றம் சொல்ல மட்டும் முதல் ஆளாக ஆஜர் ஆக எந்தத் தந்தைக்கும் தார்மீக உரிமை இல்லை என்கிறேன்.

வாக்குவாதத்திற்கு இடம் கொடுத்துவிட்டு, 'என்னையே எதிர்த்துப் பேசுறியா நீ" என்பதும் "மரியாதை இல்லாமப் பேசுறான் பாரு! என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு இவனோட' என்று இன்றைய தலைமுறையுடன் முரண்படுவதும் அவர்களிடமிருந்து விலகிப் போக நாமே தேர்ந்தெடுத்துக் கொண்ட விரைவு வாகனங்களாகும்.

மகனுடன் மோதக் கிடைக்கும் குத்துச்சண்டை மேடைகளுள் பணமேடை தலையாயது ஆகும்.

அவன் செய்யும் செலவுகளுள் ஒன்றில்கூட நமக்கு உடன்பாடு இருப்பது இல்லை. "காசோட அருமையே தெரியலை; பிராண்டட் செருப்பு, சட்டை பாண்ட் வாங்கிப் போட்டுக்கிட்டாதான் ஆச்சா? வெறும் செருப்பு 1200 ரூபாயாம். தேவையா இது? பெட்ரோல் தண்ணியா செலவழியுது! செல்போன் பில்லைப் பார்த்தா தலை சுத்துது! என்னைப் பாரு" என்று புகார்ப் பட்டியல் வாசிக்கிற தந்தைகளுக்கு ஒன்றைச் சொல்லியாக வேண்டும். உங்கள் தந்தையை விட நீங்கள் செலவாளியா இல்லையா?

அட! என்ன இப்படி அமைதியாகி விட்டீர்கள்!

பணத்தைப் பற்றி இன்றைக்கு இருக்கிற இளைய தலைமுறையின் பார்வைகளே வேறு!

## சிறந்த முதலீடு

உங்கள் முதலீடுகளிலேயே சிறந்தது எது என்று கேட்டால் ஒரு கல்வியாளர் சொல்வார், "சந்தேகமென்ன? நான் நடத்தி வரும் பொறியியற் கல்லூரிதான்" என்று. இன்னொருவர், "நான் ஒரு தனியார் வங்கியின் ஷேர்களை வெறும் பத்து ரூபாய்க்கு வாங்கிப் போட்டேன். அதன் விலை இப்போது பல ஆயிரங்கள் தெரியுமா?" என்பார். வேறு ஒரு தந்தை சொல்வார். "தங்கம் விலை இப்படிக் கன்னாபின்னாவென்று ஏறும் என்று எனக்குத் தெரியாது. வெறும் மூவாயிரத்துச் சில்லறைக்கு நிறையச் சவரன்களை வாங்கி வைத்தேன். தங்கம் விலைதான் இப்ப உங்களுக்குத் தெரியுமே" என்பார்.

ஆனால் எத்தனை தந்தைகள், "என் பிள்ளைகளே என் சிறந்த முதலீடுகள்" என்று சொல்வார்கள் என்கிறீர்கள்?

அசையாச் சொத்துகளையே சிறந்த சொத்துகள் என்று நம்பும் தந்தைகளுக்கு ஒரு வார்த்தை அசையும் சொத்துகளான நம் பிள்ளைகளே நம் மகத்தான முதலீடுகள்.

தொழில் முதலீடுகள் சரியலாம். தவிடு பொடியாகலாம். ஆனால், தொழில் முதலீடுகளுக்கு ஒதுக்கும் நேரத்தில் ஒரு பகுதியை எப்படியாவது மீட்டு எடுத்து அதைப் பிள்ளை களுக்காகச் செலவிடும்போது, தொழில் முதலீடுகளேகூடக் காப்பாற்றப்படுவதுடன், பல்கிப் பெருகவும் வாய்ப்பு இருக்கிறது.

தொழில் துறையிலும், திரைத்துறையிலும், கல்வித் துறையிலும், ஓட்டல் துறையிலும், தந்தை செய்த முதலீடு களைப் பக்கத்தில் ஒரு பெருக்கல் குறி போட்டுப் பன்மடங்காக ஆக்கிய பிள்ளைகள் உண்டா இல்லையா?

காரணம், தோழமை உணர்வுடன் கூடிய அரவணைப்பு. அவ்வப்போது "நீயே முடிவெடு சரியா இருக்கும்" என்கிற சுதந்திர விடுவிப்பு மகன்களுக்கும் தரப்பட வேண்டும். டாபர் மேன் நாய் இருக்கிறதே. இது அதன் முதலாளிக்கு முன்னே ஓடி முதலாளியையே முன்னுக்கு இழுக்கும். அல்சேஷன் என்று அழைக்கப்படும் ஜெர்மன் ஷெப்பர்ட் இருக்கிறதே. இது அதன் உரிமையாளருக்குச் சமமாக நடந்து வரும். பொமரேனியன் இருக்கிறதே, இது முதலாளி முன்னே நடக்க, அவருக்குப் பின்னால் வரும்.

என் மகன்களையா நாய்களின் பெயர்களைச் சொல்லி அவற்றுடன் ஒப்பிடுகிறீர்கள் என்று எவரும் சண்டைக்கு வராவிட்டால் ஒன்றைச் சொல்கிறேன்.

பிள்ளைகள் தந்தையின் ஜீன்களைக் கொண்டிருந்தாலும் அவர்களைப் போலவே எல்லா விதத்திலும் அச்சு (Dye) களில் போட்டு எடுக்கப்பட்டது போல அப்படியே இருக்க வேண்டும் என்கிற தந்தையின் எதிர்பார்ப்பே தவறு.

இவர்களை இழுத்துக் கொண்டு முன்னால் ஓடப் பார்க்கும் மகன்களுக்கும் வாய்ப்புத் தந்தே ஆகவேண்டும்.

## பாட்டியின் புதுப்பார்வை

சென்னையில் பிராட்வே என்று ஒரு தெரு. பெயர்தான் அப்படி. நிஜத்தில் நேர் எதிர். ஒரு பெரிய கனரக வண்டி. முன்னே சென்றால் கடந்து செல்ல வழியின்றி கார் முதல் பைக் வரை எவ்வளவு அவசரம் என்றாலும் பின்னால்தான் ஊர்வலம் போகணும்.

பல தந்தையர், இப்படித்தான். இளைய தலைமுறையினரின் முன்னேற்றப் பாதையை அடைத்துக் கொண்டு, தாங்களும் வேகமாகச் செல்லாமல், செல்ல விரும்புறவர்களுக்கும் வழிவிடாமல் கனரக வாகனம்போல் மெதுவாக நகர்கின்றனர்.

உதாரணத்திற்கு ஒரு சம்பவம். சென்னையில் உள்ள 500 கோடி ரூபாய் வணிகம் நடக்கும் ஒரு மாபெரும் நிறுவனத்தின் உரிமையாளரின் மகன் ஒருவர் வேறு ஒரு நிறுவனத்தில் பணி புரிகிறார். “ஏங்க இப்படி? பேசாம உங்க நிறுவனத்திலேயே உங்க பையனுக்கு ஒரு நல்ல நிர்வாகப் பதவியைத் தரவேண்டியதுதானே?” என்று கேட்ட நண்பருக்கு அந்த நிறுவன அதிபர் சொன்ன பதில், ‘அவனுக்கும் நமக்கும் சரிப்பட்டு வரலீங்க.”

இந்த முடிவால் இவரது நிறுவனம் சரியான நபர் இல்லாமல் தள்ளாட, வருங்காலத்தில் கட்டிக் காக்கப் போகும் தன் சாம்ராஜ்யம் எப்படியோ போகட்டும் என்று அவரது மகனான இந்த இளம் தொழிலதிபரும், சொற்ப சம்பளத் திற்காக வேறு ஒரு நிறுவனத்தில் யாருடைய வளர்ச்சிக்காகவோ உயிரை விட்டுக் கொண்டிருக்கிறார். இவர்கள் இருவரின் பிரச்னையையும் கேட்டு சமாதானப்படுத்த முடியாமல் அம்மாக்காரியும் ஒதுங்கிக் கொண்டு விட்டார்.

என் உறவினர் வட்டத்தில் மூன்றாவது தலைமுறையாக ஓர் ஆண் பிள்ளை குழந்தை பிறக்க, அந்தப் பிள்ளையின் பாட்டி பேரனின் இரு கைகளிலும் இரு தங்கக் காசுகளைக் கையில் கொடுத்துக் கையில் தூக்கிக் கொண்டார்.

இதைப் பார்த்த உறவினர் பலர் புருவங்களை உயர்த்த, “எனக்குப் பின்னாடி எல்லாமும் இவனுக்குத்தான் என்றாலும்,

விடாமுயற்சியுடைய ஒரு காதலன் ஓர் ஒருதலைக் காதலை இருதலைக் காதலாக ஆக்குகிற முயற்சியில் பெரும்பாலும் வெற்றி பெற்றுவிடுகிறான் அல்லவா? அதேபோலத்தான் இதுவும்.

இளைய தலைமுறையின் மனத்தில் காலங்காலமாக ஏறிவிட்ட முட்களை, ஒவ்வொன்றாக எடுத்துப் போடும் பொறுமை இருந்தால் ஒழிய இதில் சுலபத்தில் வெற்றி பெற முடியாது.

இராணுவ உத்தரவுகளைப் போல் ஒருசில வரிகளால் பதிக்கப்பட்டு விட்ட அழுத்தங்களை, மெல்ல இளகச் செய்யக் காலம் பிடிக்கவே செய்யும். நம் அன்பையும், அக்கறையையும் நம் உள்ளத்தையும் புரிந்து கொள்ளும் காலம் வரத்தான் செய்யும். அதுவரை நிபந்தனையற்ற அன்பைச் செலுத்த வேண்டும். அது என்ன நிபந்தனையற்ற அன்பு "அவனை நான் சொல்கிறபடி நடக்கச் சொல்!"; "இன்னது நடந்தால் தான் அவனுக்கு அதை வாங்கிக் கொடுப்பேன்!" என்பன போன்ற ஒன்றையொன்று சம்பந்தப்படுத்திய அணுகுமுறைகளைத் தளர்த்தியே ஆகவேண்டும். இதன்பிறகு உறவைச் சீர் செய்ய இருக்கவே இருக்கிறது டைலட்டேஷன் மெத்தட்! இது கண் சம்பந்தப்பட்டதாயிற்றே என்கிறீர்களா? பொறுங்கள் வரு கிறேன்.

## ஏன் மன இறுக்கம்?

கண்களில் சிகிச்சை பெற்றவர்களுக்குத் தெரியும், கண் மருத்துவர், மருந்து ஒன்றை இவர்களின் கண்களில் ஊற்றி விட்டு, "அப்படி ஓர் ஓரமாகப் போய் அமருங்கள்; பதினைந்து நிமிடங்கள் கழித்துப் பார்க்கிறேன்" என்பார்.

இந்த முறையில் கண்களில் உள்ள இறுக்கமான தசைகள் இளக ஆரம்பித்து, அவர் சோதனை செய்ய வெகுவாக உதவுகின்றன.

நாம் உயிரோடு இருக்கும்போதே கொடுக்கறதைக் கொடுத்திட்டா, என் மகளும், மருமகனும் சந்தோஷப் படுவாங்க. அவங்க சந்தோஷப்படறதை நாமும் கண்ணால பார்க்கலாமில்லையா? அதுவுமில்லாமல் அவங்களுக்கும் நம்மீது மேலும் அன்பு அதிகமாகும். குடுக்க வேண்டியதை சும்மா நாமே வைத்துக் கொண்டிருப்பதில் என்ன சுகம்?" என்று யதார்த்தமாகச் சொன்னார் இந்தப் பாட்டி.

ஒரு பாட்டிக்குத் தெரிந்த இந்த விஷயம் பல கோடி சொத்துக்கு அதிபதியான ஒரு தொழிலதிபருக்குத் தெரிந்திருந் தால், அவரது குடும்பத்தில் சந்தோஷமும் தொழிலில் வளர்ச்சியும்தானே வந்திருக்கும்!

## அனுகுமுறையில் தளர்வுகள் தேவை

இதைப் படித்துவிட்டுச் சில தந்தையர் என்னிடம் பிரதிபலித்த விதத்தை உங்களிடம் அவசியம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

'எங்கள் வீடுகளிலும் இப்படித்தான் நடக்கிறது. நீங்கள் என்னவோ பையன்களைத் தொட்டுப் பேசுங்கள் (ஸ்பரிசம்) அன்பு காட்டுங்கள்; அவர்களையும் ஒரு பொருட்டாக மதியுங்கள்; என் தலையாய சொத்து இவன்தான் என்று சொல்லுங்கள் என்கிறீர்கள். எல்லாம் சரிதான். ஆனால் அவர்கள் பொருட்படுத்தினால்தானே? நான் இருக்கிற இடத்தில் அவன் இருக்கமாட்டேன் என்கிறான். வா ஒன்றாகச் சாப்பிடலாம் என்றால் நான் சாப்பிட்டுட்டேன் என்றோ, எனக்கு இப்போ பசியில்லை என்றோ தவிர்க்கிறான். என்ன சொன்னாலும் தப்பாவே புரிஞ்சுக்குறான். முன்னிலும் எரிச்சலாக அல்லவா வருகிறது?' என்றார்கள். இவர்கள் தனித்தனியே பேசியபோதும் குரல்கள் என்னவோ கோரஸ் போலவே ஒலித்ததுதான் ஆச்சரியம்.

சில ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமல் கிடந்த ஒரு வாகனத்தை என்னதான் துடைத்து பாலிஷ் போட்டாலும் புதிதாக ஆகிவிடுமா? அதுபோலத்தான் இதுவும்.

இப்படி இருதயத்திற்கும் டைலட்டேஷன் சிகிச்சை உண்டு என்றால் இருதய மருத்துவர்கள் சிரிப்பார்கள். நான் சொல்லப் போவதே வேறு. காலங்காலமாகத் தந்தை - மகன் இடையே நடந்த விரும்பத்தகாத சில சம்பவங்கள், கொட்டப்பட்ட அமில வார்த்தைகள், அப்படி ஒன்றும் நடக்காதபோதும் தவறாகப் புரிந்து கொள்ள இடம் தந்த சம்பவங்கள் என்று பலவும் ஒன்று சேர்ந்து இளைய தலைமுறையின் மனத்தில் இறுக்கத்தையே ஏற்படுத்தியிருக்கின்றன.

## வேகம் அடங்க...

இந்த இறுக்கத்தைத் தளர்த்தவே டைலட்டேஷன் மெத்தட், நிபந்தனையற்ற அன்பு; நாம் புறக்கணிக்கப் பட்டாலும் மாறாத அணுகுமுறைகள் பொறுமையான கையாளல்கள் ஆகியவற்றால் இறுகிப் போன மனச் சுவர்களின் கதவுகள் மெல்லத் திறக்க ஆரம்பிக்கின்றன.

இவரை மதியாத போதும் புறக்கணிக்கும்போதும் முன்பு போல் சலிப்படையாமல் கோபப்படாமல் இருக்கிறாரே, இவரது அணுகுமுறையில் ஏதோ மாற்றம் தெரிகிறதே என்று அந்த மகன் மகள் உணரும்வரை பொறுமை தொடரவேண்டும். ஆனால், இது இலேசுப்பட்ட விஷயம் அல்ல. 'நான் பார்த்துப் பொறந்த பய! உனக்கு இவ்வளவு இருந்தா எனக்கு எவ்வளவு இருக்கும்?" என்று உள்ளுக்குள்ளிருந்து ஓர் அரக்கன் அடிக்கடி அசுரமாய் எட்டிப் பார்ப்பான்.

'இரு இரு! பொறுமையாய் இரு! இறுதி வெற்றிக் களிப்பைக் கைக்கொள்ளவே இந்தப் பொறுமையெல்லாம்' என்று அவன் மீது குளிர்நீர் தெளித்தால் வேகம் அடங்கும்.

பல தந்தையருக்கு இந்தப் பொறுமை இருப்பதே இல்லை என்பதுதான் அடிப்படைப் பிரச்சனையே. தந்தையர் சிலர், "நீங்க சொல்கிற அளவிற்கு என் பையன் மோசமில்லை. பேசக் கூப்பிட்டால் வருவான். சொல்றதையெல்லாம் கேட்டுப்பான்.

வழக்கமான களங்களை (வீடு, அலுவலகம்) தேர்ந்தெடுக்கக் கூடாது.

மாறுபட்ட சூழல் மிக அவசியம். உரிய இருவரும் தனியாகப் பயணிக்கும் பயண நேரங்கள். சுற்றுலாத் தலங்கள், பூங்கா, கடற்கரை போன்ற சூழலில் இடையீடு இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

சாண்ட்விச்சின் மேல் பகுதி ரொட்டியால் ஆன மென்மைப் பகுதி அல்லவா? இதன்படி நன்கு மனம் விட்டுப் பேசுங்கள். நீங்கள் அவருக்கு இழைத்த துன்பங்களை (?) எண்ணி வருந்துவதாகப் பேசுங்கள். பிறகு இவர்களது நல்ல தன்மைகளைப் பாராட்டுங்கள். (கவனம்! இதில் சற்றும் செயற்கை தட்டக்கூடாது. காரியம் கெட்டு விடும்) இவர்களது ஆழ்மனத்தை இப்போது தொட்டு விட்டீர்கள் என்பதற்கு அடையாளமாக, அவர்களும் மனம் இலயித்துச் சில விஷயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பிப்பார்கள்.

இது உங்களிடமிருந்து எதையும் கேட்டுக் கொள்ளும், ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்திற்கு இப்போது வந்து விட்டார்கள் என்பதற்கு ஓர் நல்ல அடையாளமாகும்.

பம்பர விளையாட்டில் ‘பத்தாங்குத்து பாறாங்கல்லு’ என்று ஒரு விஷயம் உண்டு. அதாவது பம்பர விளையாட்டில் தோற்பவரின் பம்பரத்தை ஆணி தெரியும்படியாகத் தலைகீழாக நிறுத்தி அதன்மீது கல்லைப் போடுவது.

இந்தப் பாணியில் இப்போது அவர்களின் குறைகளை மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை, கேரக்டர் திருத்தங்களை, புதிய அணுகுமுறைகளை அவர்களுக்கு வலிக்காதபடி சொல்ல ஆரம்பியுங்கள். இது சாண்ட்விச்சில் நடுப்பகுதியில் உள்ள காய்கறி போன்றது.

இருங்கள் இன்னும் பாக்கியிருக்கிறது.

ஆனால், காரியம்னு வரும்போது அவனோட இஷ்டப்படிதான் நடந்துக்குவான். இவனை என்ன பண்ணச் சொல்லச் சொல்றீங்க?" என்பார்கள்.

இருக்கவே இருக்கு சாண்ட் விட்ச் முறை.

## அது என்ன சாண்ட்விச் முறை?

**சா**ண்ட்விச் என்பது சுவைத்துச் சாப்பிடுவதற்கு என்றால், சாண்ட்விச் முறை என்பது, வாழ்வில் சுவை கூடுவதற்கு. ஆமாம், இந்த முறையின்மூலம் பல உறவுச் சிதைவுகளை நாம் சீர் செய்ய முடியும். அப்படி ஒரு மாயம் நம் வாழ்வில் நிகழ்ந்து விடுமா என்ன என்கிறீர்களா?

சில நேரங்களில் இது அபாரமாகப் பயன் தரும். சில சந்தர்ப்பங்களில் நாள்பட்ட பலனைத் தரும்.

'நாம் நம்பமாட்டேன். நாய் வாலை நிமிர்த்துவதும் நான் குறிப்பிடும் ஆசாமியின் குணத்தை மாற்றுவதும் ஒன்றுதான்' என்று அவ நம்பிக்கையோட பேசி, இப்போது இருக்கும் நிலைமையைவிட மோசமாக ஆகாமல் இருந்தால் சரி என்று தேன்கூட்டைக் கலைக்கப் பயப்படுகிறவர்களின் மன நிலை யோடு இப்படியே காலந்தள்ளுபவர்கள் இருக்கிறார்கள்.

அப்படியின்றி நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டு இந்த சாண்ட்விச் முறையை முயன்று பார்க்கலாம்.

முதலில் சரியான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்க வேண் டும். இந்த வாய்ப்பு சில மணிநேரங்களில் வாய்க்கலாம். சில நாள் ஆகலாம். ஏன் சில வாரங்கள்கூட ஆகலாம்.

முதலில் களம் மிக முக்கியம்.

மகனோ, மகளோ, 'மனைவியோ, கணவனோ, உறவினரோ, ஊழியரோ யாரைச் சரி செய்ய நினைத்தாலும்

நான் என்கிற அகந்தை(Ego)யை முதலில் இவர்கள் உதறியாக வேண்டும்.

இந்த வறட்டுப் பிடிவாதத்தால் இதுவரை இழந்தவை போதும். அணுகுமுறைகளை மாற்றிப் பார்த்தால் பலன்கள் அபாரமாக இருக்கும்.

இதன் அடிப்படையில்தான் நாய் வாலை மட்டுமல்ல, சிங்கத்தின் வாலையேகூட நிமிர்த்த முடியும் என்று நம்பிக்கையோடு குறிப்பிட்டிருந்தேன்.

உங்களை ஒன்று கேட்கிறேன்.

தனி மனிதரிடம் கௌரவத்தைவிட்டுக் கொடுத்து, ஊர் மத்தியில் கௌரவமாக வாழ்வது புத்தசாலித்தனமா? அல்லது மற்றவர்களிடமெல்லாம் அவமானப்பட்டுப் போகிறேன்; ஆனால், இந்த ஓர் ஆளிடம் மட்டும் இறங்கிப் போக மாட்டேன் என்பது புத்திசாலித்தனமா?

இந்த ஒரு கேள்விக்கு சிந்தித்து அறிவுபூர்வமாக விடை கண்டவர்கள் சத்தமின்றிச் சாதிக்கிறார்கள். இந்தக் கேள்வியைச் சிந்திக்கக் கூடப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாதவர்கள், தொடர்ந்து தவறு செய்கிறார்கள்.

காடை கௌதாரியைப் பிடிக்கக் கண்ணி வைக்கிறார்கள். யானையைப் பிடிக்கக் குழி வெட்டுகிறார்கள்; மீனைப் பிடிக்க வலையோ - தூண்டிலோ இருக்கின்றன. ஆனால், இந்த மனிதர்களைப் பிடிக்கத்தான் பலருக்கு வழி தெரிவதில்லை.

உயிரினங்களைப் பிடிக்க உதவும் இந்த நான்கு உபகரணங்களைப் போல் மனிதர்களை வளைத்துப் போடவும் நான்கு உபகரணங்கள் இருக்கின்றன.

இவற்றிற்குள் விழுந்து சிக்காத மனிதர்களே இலர். விதிவிலக்காக எவரும் இருந்தால், அவர்கள் மனிதர்களே அல்லர்.

## மந்திர வாசகங்கள்

**சா**ண்ட்விச் முறையின் வெற்றியே அதன் நிறைவு செய்யும் அழகில்தான் ஒளிந்திருக்கிறது.

மென்மையாக அழகுறப் பாராட்டினோமே, அது சாண்ட்விச்சின் மேல் பகுதியான ரொட்டி போன்றது. நடுவிலே காய்கறிகளையோ, அசைவப் பொருள் ஒன்றையோ வைத்தோமே, அது, எதிராளியின் குறைகளைச் சுட்டிக்காட்டு தலையும், நாம் எதிர்பார்க்கும் மாற்றங்களையும் குறிக்கும்.

## உங்களிடம் ஒரு கேள்வி

**நா**ய்வாலை மட்டுமல்ல, சிங்கத்தின் வாலையேகூட நிமிர்த்துவதைப் பற்றிப் பேச ஆரம்பித்திருந்தோம்.

எத்துணையோ ஆண்டுகள் இல்லறம் நடத்திவிட்டு "இவரைத் திருத்தவே முடியலைங்க. அதனால் அவர் போக்கிலேயே விட்டுட்டேன்" என்கிற பெண்மணிகளும், "அவளை மாத்துறதுங்கிறது இந்த ஜென்மத்துல நடக்காதுங்குறது தெரிஞ்சு போச்சு. நான்தான் சரி செய்துக்கிட்டு காலத்தை ஓட்டிக்கிட்டிருக்கேன்" என்று புலம்புகிற கணவர்களும் உண்டு.

இதே போன்ற எண்ணம், பெற்றோருக்குப் பிள்ளைகள் மீதும் பிள்ளைகளுக்குப் பெற்றோர் மீதும் உண்டு.

இதையே உரிமமாக (லைசன்ஸ்) எடுத்துக் கொண்டு தொடர்ந்து ஆட்டம் போட்டுக் கொண்டிருப்பவர்களை இனியும் அனுமதியாதீர்கள்.

'எதிராளி தன்னை மாற்றிக் கொள்ளாதபோது நான் மட்டும் ஏன் மாறவேண்டும்?' என்கிற அடிப்படையான எண்ண கோளாறுதான் உறவுகள் சீர்கெடத் தலையாய காரணம்.

'முதலில் அவர் மாறட்டும், அப்புறம் நான் மாறுகிறேனா, இல்லையா பாருங்கள்' என்று பிடித்த பிடியைத் தளரவிடாத,

இந்த இருவருக்கும் தங்கள் மகன்களது இனிய பக்கம் மட்டுமே தெரிய வேறு என்னதான் காரணமாக இருக்கும் என்கிறீர்கள்?

யார் யாரிடமோ அவர்கள் முகம்கூடக் கோணக்கூடாதே என்று பல்லிளிக்கிறவர்கள், கண்டவர்களையும் அற்ப நன்மைகளுக்காகத் தாங்கு தாங்கு என்று தாங்குகிறவர்கள், ஏற்படும் எரிச்சல்களையெல்லாம் அடக்கிக் கொண்டு அமைதியாக இருந்து விடுகிறவர்கள். ஆனால் இவர்களின் அன்பையே வாழ்வின் உயிர் நீராகவும் ஆதாரமாகவும் கருதுகிற குடும்ப உறுப்பினர்களிடம் எரிந்து விழுவது ஏன்?

கலெக்டர் தன் செயலாளரைக் கோபித்துக் கொண்டால் கலெக்டரது பியூனின் வீட்டில் அவரது மனைவிக்கு செமர்த்தியாய் அடி விழுமாம்.

இந்தக் கதை உங்களுக்குத் தெரியுமா?

## கோபத்தைக் கைவிடுங்கள்

கலெக்டர் தன் செயலாளரைக் கோபித்துக் கொண்டதற்கு பியூனின் மனைவிக்கு ஏன் அடி விழவேண்டும்.

கலெக்டர் செயலாளரைக் கோபிக்க செயலாளர் செக்ஷன் ஆபீஸரைத் திட்ட இவர் ஹெட் கிளார்க்கை வாங்கு வாங்கென்று வாங்க, ஹெட் கிளார்க், கிளார்க்கை வசைபாட, கிளார்க் பியூனைக் கண்டிக்க 'வீட்டிற்குப் போன பியூன், தன் கோபத்தை வெளிக்கொட்டும் விதமாக மனைவிக்கு செமர்த்தியாகக் கொடுத்தாராம்.

ஆக, இவர்களுள் எவருக்குமே இந்த அர்த்தமற்ற கோபத்தை வடிகால் அமைத்து, அதை ஒன்றும் அற்றதாய் ஆக்கத் தெரியவில்லை. கொழுத்த வளமான நிலத்திற்கு அதிகமான நீரைப் பாய்ச்சி, வறண்டு போய்விடக்கூடிய நிலத்திற்கு ஒன்றும் கிடைக்காமல் செய்து விடுகிறோம்.

## மருத்துவர்கள் தராத புது விட்டமின்

மனிதர்களை வளைத்துப் போட இந்த நான்கு வழிகளைத் தெரிந்து கொண்டால் போதும். இவற்றிற்கு மயங்காத, அடிபணியாத, வளைந்து கொடுக்காத மனிதர்கள் அநேகமாக இருக்கமாட்டார்கள்.

முதலாவது அன்பு. மனிதன் வெளிக்காட்டிக் கொள்ளாத போதும், அவன் அன்புக்கு ஏங்கித் தவிக்கும் ஒரு சாதாரண உயிரினமே!

அவர் பொல்லாதவர்; அரக்க குணம் படைத்தவர். அன்புக் கெல்லாம் மசியாதவர் என்று எவரையாவது முன்னுதாரண மாகக் காட்டினால் அவரது வரலாறு ஆராயப்படவேண்டும். இளம் சிறார்களை, சிறுமிகளை அவர்கள் கிரிமினல் குற்றம் செய்தாலும் தண்டிக்க நம் சட்டங்களில் இடம் இல்லை.

இவர்களைச் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்த்துப் பராமரிப்பார்களே தவிர, சிறைத்தண்டனை இல்லை. தந்தையையே கொன்ற குற்றவாளிகள்கூட இப்பள்ளியில் உண்டு. இவர்களது வரலாறுகளை ஆராய்ந்தால் அன்பு மறுக்கப் பட்டவர்களாகவே இருப்பார்கள்.

இன்ன வைட்டமின் இல்லாவிட்டால் உடலில் இன்னின்ன குறைபாடுகள் உருவாகும் என்று மருத்துவர்கள் சொல்வது போல், அன்பு எனும் வைட்டமின் ஊட்டப்படாதவர்கள் முரட்டுத்தன வியாதிக்கு ஆளாகிறார்கள்.

ஊருக்கெல்லாம் பொல்லாத்தனம் காட்டும் இவர்கள். அன்பு காட்டுபவர்களிடம் மட்டும் தங்களது இனிய முகத்தை வெளிப்படுத்தியே இருக்கிறார்கள்.

ஒன்பது குடும்ப உறுப்பினர்களைக் கொன்ற ஜெயப்பிரகாஷை அவரது தந்தை, 'என் மகன் பாவம்; அவன் அப்பாவி! அவனை மன்னியுங்கள்' என்று குடியரசுத் தலைவரிடம் கருணை மனு கொடுத்தார்.

நொச்சிக்குப்பம் வீரமணி கொல்லப்பட்ட போது, அவனது தாய், "என் மகன் நல்லவன்" என்று சான்றிதழ் கொடுத்தார்.